மஹாகவி தண்டி என்பவர் வடமொழிக் கதாசிரியர்களுள் மிகவும் புகழ்பெற்றவர். இவர் எழுதிய தசகுமாரசரிதம் என்னும் வடமொழி நூல் உலகப்பிரசித்தி பெற்றது. அதிலே உள்ள கிளைக்கதைகளுள் ஒன்று காமமஞ்சரி என்னும் கணிகை மாதின் கதையாகும். இக்கதை மிகவும் புதுமையானது. இக்கதையின் ஓர் அம்சத்தையடிப்படையாகக் கொண்டு இச்சிறு கவிதை நாடகம் படைக்கப்பட்டுள்ளது. மனித பலமும் பலவீனமும் சித்திரிக்கப்படும் இந்நாடகமூலம் வஞ்சனையின்வெற்றி மனித சமுதாயத்துக்கு ஓர் வேதனையாகவே அமைகின்றது என்ற உண்மை போதிக்கப்படுகிறது.



## கவிதை நாடகம்
## காட்சி — 1

இடம் - கானகத்தில் மருச்சி முனிவரின் ஆச்சிரமம்
பாத்திரங்கள் - மருச்சி முனிவர்
கணிகை மாது காமமஞ்சரி
காமமஞ்சரியின் தாய்

(விக்கி விக்கியழும் பெண் குரலொன்று கேட்கிறது)

முனிவர் :
யாரம்மா நீ எதற்காக வந்தாய்
முற்றுந் துறந்த முனிவர்கள் வாழும்
ஆச்சிர மத்தை அடைந்தது மேனோ?
துன்பச் சுழியிற் சுழன்று வாடித்
தென்பற் றனைப்போல் தெரிகின் றனையே
விம்மி விம்மி வேதனை யோடு
அம்மா நீயும் அழுவது மேனோ?

காமமஞ்சரி :
மாசில்லாத மருச்சி முனிவ
தாசி யான் ஓர் ஈனப் பிறவி
காம மஞ்சரி யென்பதென் நாமம்
கலைபல கற்ற கணிகை என்னை
விலைமக ளாக்க விழைகிறாள் அன்னை
பெண்மையைச் சிதைத்துப் பெருமை யிழந்து
மண்ணில் வாழும் எண்ண மிலேன் யான்
நிலையில்லாத உலக வாழ்க்கை
வலையிற் சிக்கி வருந்திடாது

சிவனை எண்ணித் தினமும் இங்கே
தவம் மேற்கொள்ளத் தமியேன் வந்தேன்
சிறியள் என்னைச் சிஷ்யை யாக
ஏற்றுக் கொள்க இணையடி பணிந்தேன்

முனிவர்:
பெண்ணே உள்ளம் பேதலிக் காதே
கண்மூன் றுடையான் கருணை பொழிவான்

(தூரத்தே பெண்குர லொன்று கேட்கிறது)

தாய்:
மகளே! மகளே!...

முனிவர்:
... மாதே! யாரது?

காம:
என்னை யீன்ற அன்னை போலும்,

(காமமஞ்சரியின் தாய் முனிவரை அடைந்து)

தாய்:
சுவாமி உங்களைத் தொழுகின்றேன் யான்

முனி:
எழுந்திரு தாயே ஏனழு கின்றாய்
அழுவத னாலே ஆவ தொன்றில்லை

தாய்:

மாதவச் செல்வ மங்கை யிவள் யான்
பத்து மாதஞ் சுமந்து பெற்ற
புத்திரி, என்னைப் புறக்கணித் திட்டாள்
பேதை யானோ பெற்ற பாசத்தால்
சாதலின்றித் தவிக்கின்றேனே!
இவளையன்றி யெது விதகதியும்
இல்லா என்னை இவள்கை விட்டாள்
பொல்லா நாயேன் போவது மெங்கே?

முனி:

தாயே உந்தன் சஞ்சலம் உணர்கிறேன்
ஆயினும் உனது அருமை மகளின்
உள்ளமோ மிகவும் உடைந்திருக் கின்றது
காசுக் காக காதலை விற்கும்
நீச வாழ்வை நெருப்பென நினைக்கும்
இச்சிறு பெண்ணை எதற்காக நீயும்
இச்சைக் கெதிராய் நச்சரிக்கின்றாய்?

தாய்:

ஞானக் கடலே! நங்கை இவளைக்
கணிகையர் குலத்துக் கன்னியர் செய்யும்
பணியைத் தானே பார்க்கச் சொன்னேன்
சின்னஞ் சிறிய செல்வி யிவளின்
அன்னை யெனக்கிவ் வுரிமை யில்லையா?

காம:

புழுத்துப் போன பாதையைக் காட்டும்
உளுத்துப் போன உன்தன் உரிமை

முனி :

மகளே உன்தன் மாதாவை இவ்வாறு
இகழ்தல் நன்றோ? இதுதவ றன்றோ?

காம :

மாசில் லாதோய் மன்னிக்க வேண்டும்
பெற்ற பிள்ளை யென்னும் எண்ணம்
சற்று மின்றித் தாசி யாக்க
அன்னை முயல்வதும் அடுக்குமோ சுவாமி
என்னை யீன்றவள் என்பதற்காகப்
புன்மைச் செயலைப் புரிவனோ ஐயா?
பெற்ற தனது சொற்படி கேட்டல்
ஒன்றே முறையென உடும்புப் பிடியாய்
நிற்கின் றாளே நீதியோ முறையோ?

தாய் :

சிவனருட் செல்வ செல்வி இவளைப்
பெற்றவள் நானே என்பதற் காக
என்
சொற்படி நடக்கத் தூண்டிட வில்லை
மகளை வளமாய் வாழ வைத்துப்
புகழைத் தேடப் பூமியில் விழைதல்
எந்தத் தாய்க்கும் இயற்கையே யாகும்
அருமை யாகப் பெற்ற மகளின்
பெருமை கண்டு பெருமிதம் அடையும்
ஆசையாலே இவளைப் பார்த்துக்
கடமையிலிருந்து தவறுதல் தீதென்று
உரிமை யோடு ஒருசில சொன்னேன்
ஆனால் இவளோ ஆத்திரத் தோடு
வீணாக வீட்டை விட்டுக் கிளம்பித்
தவம்புரி தற்காய் தங்களை யடைந்துளாள்

முனி :

தவத்தை விரும்பும் தையலை, வீணாய்
அவத்தில் செலுத்துதல் அநீதி யம்மா

தாய் :

தவத்தை விரும்பித் தானா வந்தாள்?
அவளின் போக்கை அடிக்கடி யானும்
தவறு என்றேன். தான்சொல் வதையே
சரியென என்னை ஏற்றிடப் பணித்தாள்
முடியா தென்றேன். மூண்டது சண்டை
குடியைக் கெடுக்கும் கோடரிக் காம்பின்
வடிவில் வந்தவள் வஞ்சித்து விட்டு
அடிகாள்! உங்களை அடைந்துநிற் கின்றாள்

முனி :

தாயே உன்தன் சேயின் உளப்படி
நீயேன் நடக்க நினைக்கிறாயில்லை
கொஞ்சக் காலம் விட்டுக் கொடுத்தால்
வஞ்சிக் கொடி உளம் மாறவும் கூடும்

தாய் :

விட்டுக் கொடுத்ததனாலே தானே
கெட்டுப் போனாள்...

முனி :

... என்ன சொல்கிறாய்
எல்லாம் எனக்கு மயக்கமாய் உளதே

தாய் :

தவசி ரேஷ்ட! தையல் இவளின்
சரித்திர மெல்லாம் சாற்றக் கேண்மின்
அருமை யான எந்தன் மகள்ஓர்
அழகிய அந்தண இளைஞனைக் கண்டு
பழகத் தொடங்கினாள். பழக்கம் பின்னர்,
காதலாகக் கனிய, அவனைத்
திருமணம் செய்யச் சித்தம் பூண்டாள்
காசே யில்லாக் காளையை மணந்து
மோசம் போகப் போகிறாள் என்று
பாசத்தோடு தடுத்துப் பார்த்தேன்
ஆனால் இவளோ அசையவே யில்லை
தானாய் மாறுவாள் என்று சிலநாள்
பேசா திருந்தேன். (அழுதபடி) பின்னர்...

முனிவர் :

பின்னர்...

தாய் :

ஒருநாள் அவனுடன் ஓடியே விட்டாள்
(சற்று நிறுத்தி)
ஓடிய மகளை நாடிச் சென்றேன்
அவனுடன் இவளை
அழைத்து வந்தேன். சிலநாள் அவனுடன்
வாழவும் வைத்தேன்.

காம :

ஆமாம் சுவாமி

அழைத்து வந்து அவரை விட்டாற்
கலைத்தே விட்டாள் கல்நெஞ்சக் காரி

தாய் :
உழைக்கத் தெரியா உதவாக் கரையைக்
கலைத்தது தவரு? காசில்லானை
மணந்து என் தன் மகள்பின் மடிந்து
பிணமாய்ப் போவதைப் பொறுப்பளு சுவாமி

காம :
காதலின் புனிதத் தன்மை உணராக்
காதகி உனக்குக் காசே தெய்வம்
ஆதலால் தானே என்னைப் பார்த்து
வீட்டை விட்டு வெளிக்கிடச் சொன்னுய்

தாய் :
ஆத்திரத் தாலே அப்படிச் சொல்லிப்
போட்டேன் கண்ணே புறப்படு போவோம்

காம :
அம்மா அவருடன் வாழ என்னை
விடுவதா யிருந்தால் வீட்டுக்கு வருவேன்
முடியா தென்ருல்...முடியா தம்மா

தாய் :
முடியாது மகளே முடியாது இந்தப்
பிடிவாதம் வேண்டாம் பின்னுள்
வருந்துவாய்

முனிவர் :
காம மஞ்சரி கண்ணீர் விடும்உன்
தாயுடன் செல்க தவத்தை விடுக.

காம :

தூயோய் அப்படிச் சொல்லிட வேண்டாம்
தீயன் பூமியில் ஜனன மெடுத்துப்
பட்ட வேதனை ஒன்று இரண்டா?
இட்டப் படியே வாழ முடியா
எனக்கேன் வாழ்வு எனக்கேன் அன்னை.

முனி :

காம மஞ்சரி கலக்க மடையேல்
பூமி வாழ்க்கை பூமெத்தை யல்ல
நினைப்பது போல எல்லாம் நடந்தால்
மனத்துயர் இந்த மாந்தர்க்கே இல்லை
இன்ப துன்பங்கள் இரவு பகல்போல்
மாறி மாறி இந்த மண்ணில்
வந்து வந்து போகும் இதற்கு
வரம்பு கட்ட முடியா தம்மா
கவலை யென்னும் பிணியறுக் கின்ற
கால மென்னும் வைத்திய னிருக்க
ஞால மீதில் மக்கள் நாளும்
நலிதல் மிகவும் புதுமை யம்மா
ஆதலாலே ஆத்திரம் வேண்டாம்
காத லோடு கனிந்து கேட்கும்
அன்னை யுடனே வீட்டுக்கேகு.

காம:

சுவாமி ஒன்று தொழுது கேட்கின்றேன்
காசுக் காகக் காதலை விற்கும்
தாசி யாவதைத் தாங்களும் ஏற்பதா
இதுவா தர்மம் இதுவா நீதி?

காம:

சுவாமி ஒன்று தொழுது கேட்கின்றேன்
காசுக் காகக் காதலை விற்கும்
தாசி யாவதைத் தாங்களும் ஏற்பதா
இதுவா தர்மம் இதுவா நீதி?

முனி:

இல்லை மஞ்சரி இல்லவே யில்லை
அல்லற் படுமுன் அன்னைக் காகச்
சொல்லிப் பார்த்தேன். துயரம் களைக

காம:

தவத்தின் மிக்கோய் தையல் யானே
பந்தம் பாசம் யாவையும் விட்டு
வந்தது திரும்பிப் போதற் கன்று
எந்தனை வீட்டிற் கேகும் வண்ணம்
சொன்னால் உடனே சுடுதீப் பாய்ந்து
உயிரையே விடுவேன் உண்மை சுவாமி.

முனி:

பெண்ணே என்ன பேதமை உன்தன்
எண்ணம்? இதுவா எரியில் வீழ்ந்தால்
யாருக்கு லாபம் யாருக்கு நட்டம்
பாரில் உன்னைப் பரமன் படைத்தது
தற்கொலை செய்து சாவதற் கல்ல

காம:

அமைதி யில்லா அபலை துன்பச்
சுமையை எப்படித் தொலைப்பேன் சுவாமி

முனி :

நல்லது பெண்ணே நானினி உன்தன்
முடிவை மாற்ற முயற்சிக்க மாட்டேன்
தவந்தான் உந்தன் தலையாய முடிவெனில்
அவனை நினைத்து ஆற்றுக தவத்தை
சிவனார் திருவருள் சேருக
வாழ்க.

காம :

நன்றி சுவாமி நன்றி இந்த
நாயேன் பெற்ற நற்பயன் இதுவே
தாயும் தந்தையும் சர்வமும் நீங்களே
இந்தப் பிறவி எடுத்த பயனைத்
தந்தாய். நீசத் தாசி வாழ்ந்தேன்.
நன்றி ஆயிரம். வணங்குகிறேன்.
(காலில் விழுந்து வணங்குகிறாள்)

தாய் :

அருந்தவ முனிவ அவளுடன் சேர்ந்து
என்னை நீங்களும் ஏமாற்றலாமா?
பெற்று வளர்த்துப் பிரியமாய்க் காத்த
பொற் கொடி யாளை எப்படிப் பிரிவேன்.
இவளை வளர்த்து இப்படி யாகக்
கவலைப் படயான் கதியா யிற்றே
யாரோடு நோவேன் யார்க்கெடுத்
துரைப்பேன்.

முனி :

அன்னையே உள்ளம் அமைதி கொள்ளுக
இந்த உலகில் எதுவா யிருப்பினும்
அந்தப் பகவான் ஆணையே யின்றி
அசையா தென்பதை யறிந்தால் உலகம்
கவலை தன்னைக் காண்பதே யரிது
இவளோ அழுங்குப் பிடியாய் நிற்கிறாள்
தவம் மேற் கொள்ளச் சங்கற்பம் பூண்ட
மகளைத் தடுத்தல் மகா பாவ மம்மா
இகத்தைத் துறந்து பரத்தை யடைதலே
சுகத்தைக் கொடுக்கும் தூய வழியாம்
இகமிசை நாங்கள் வாழ்வது எல்லாம்
பரமனை நினைக்கும் பணிக்கே யாகும்

தாய் :

அறிவேன் சுவாமி ஆயினும் உள்ளம்
கேட்டால் தானே...

முனி :

வாட்டம் விடுக..
செல்வச் செழிப்பில் சீருடன் வாழ்ந்த
மெல்லியல் துன்பம் மேவிடு காணில்
தொடர்ந்திருப் பாளெனச் சொல்வதற்
கில்லை
ஓரிரு நாட்களில் உள்ளம் தளர
காரிகை காட்டை வெறுத்திங் கிருந்து
வீடு தேடி ஓடியே வருவாள்.

தாய் :

அறிவேன் சுவாமி ஆயினும் உள்ளம்
கேட்டால் தானே...

முனி :

வாட்டம் விடுக..
செல்வச் செழிப்பில் சீருடன் வாழ்ந்த
மெல்லியல் துன்பம் மேவிடு கானில்
தொடர்ந்திருப் பாளெனச் சொல்வதற்
கில்லை
ஓரிரு நாட்களில் உள்ளம் தளர
காரிகை காட்டை வெறுத்திங் கிருந்து
வீடு தேடி ஓடியே வருவாள்.

தாய்:

ஏதோ சுவாமி இவளை விட்டுப்
பேதை யானும் பிரிந்து செல்கிறேன்.
பெற்ற வயிறோ பெருந்தீப் பற்றி
முற்றாய் எரிந்து முடியு முன்னர்
என்தன் மகளை என்னிடம் சேர்த்து
வைக்கும் வண்ணம் வணங்கு கின்றேன்.

முனி :

ஆகட்டும் தாயே.

தாய்:

அடியேன் வருகிறேன்.

(தாய் அழுதவண்ணம் செல்கிறாள்)

— திரை —

## காட்சி — 2

இடம் : ஆச்சிரமம்

பாத்திரங்கள் : முனிவர்

காமமஞ்சரி

(பொழுது புலரும் நேரம் புள்ளினங்கள் சத்தமிடுகின்றன. காலை நேரத்திற்குரிய இசை ஒலிக்கின்றது.)

காம

கோழிகள் கூவின. கொம்பரிற் புட்கள்
அங்கொன்று இங்கொன்றாய் அருளத்
தொடங்கின
பொழுது புலருமுன் பொய்கையில் ஆடி
குடத்தில் நீரை மொண்டு வந்தும்
குப்பை கூழங்கள் கூட்டிப் பெருக்கியும்
வழிபாட்டுக் காயத்தம் செய்திட வேண்டும்
(அவள் நீரில் இறங்குகிறாள். அந்த ஒலி கேட்கின்றது)
சலசலத் தோடும் தண்புன லாறே
கொல்லுந் தன்மையாய்க் குளிர்கின்றாயே
சில்லென வீசும் சீதள வாடையே
மெல்லியல் என்தன் மேனியை நடுங்கச்
செய்கிறா யன்றோ தேவ தேவா
எத்தனை நாட்கள் இத்தனை தொல்லை
இறைவா என்று என் லட்சியம் முடியும்
(பெருமூச்சு விடுதல்)
பூத்துக் குலுங்கும் புதிய மலர்களே
வாழ்த்துக் கூறும் வரிவண் டினங்களே
காற்றில் தவழும் கடிமலர் வாசமே
கூற்றுவ னாகியென் னுள்ளம் குடைவ
தேன்

ஆற்றல் மிக்க அருந்தவ முனிவன்
நோற்கும் இடத்தை நோக்கும் போதென்
நெஞ்சில் ஒருசுமை நிறைவது மேனோ?
(மௌனம்)
முனிவரும் எழுந்தனர் அதோவரு கின்றார்
பனித்திடும் கண்களே பதறிடும் உள்ளமே!!
முனிவரைக் கண்டதும் நனிதுய
ரடைவதேன்
இனியும் தொடர்ந்து இப்படி யிருந்தால்...

முனி :

காமமஞ்சரி

காம:

வணக்கம் சுவாமி

முனி:
வனிதாய் உன்முகம் வாடியிருப்பதேன்

காம :
தனிமை சுவாமி...

முனி :
(சிரிக்கிறார்) தனிமையா ஆஹா

காம :
தனிமைதான் சுவாமி. தகிக்கிற துள்ளம்

முனி :
பைத்தியக்காரி...

காம :
... பைத்தியமேதான்

முனி :

கானகம் உனக்குக் கசந்து விட்டது
மானே நீயுன் மாதாவிடம் போ

காம :

(திடுக்குற்று) சுவாமி! அப்படிச் சொல்லவே
வேண்டாம்
உங்களை விட்டு ஒருகணம் கூட
எந்தனுல்பிரிய இயலா தையா

முனி :

நல்லது பெண்ணே நான்வரு கின்றேன்

காம :

சுவாமி!

முனி :

என்ன சொல்ல விழைகிருய்

காம :

தையல் எனக்கோர் சந்தேகம் அதனை
ஐய! நீயும் அகற்றிட வேண்டும்

முனி :

விபரமாய்க் கூறு, விளக்க முயல்கிறேன்

காம :

அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்றும்
உலகத் தார்க்கு உறுதிப் பொருளென
பலநூல் கூறப் பார்த்தி ருக்கின்றேன்
உண்மையா சுவாமி...

முனி :

... உண்மைதான் மஞ்சரி

காம :

அப்படியானல் அறமும் இன்பமும்
ஒன்றற் கொன்று ஒப்பா சுவாமி
உரைத்திட வேண்டும்
தகுதியைப் பொறுத்த வரையில் இரண்டும்
சமமோ என்பதைச் சாற்றிட வேண்டும்

முனி :

அழியாப் பொருளாம் அறத்துடன்
சணத்தில்
அழியும் இன்பத்தை ஒப்பிடலாமோ?
கற்ரேர் போற்றும் அறத்திற் கீடாய்
மற்ருேர் பொருளும் மண்மீ துண்டோ?
அறமே பெரியது. அழிவே யிலாதது

காம :

மகிழ்ச்சி ஐயனே மாது எனக்கு
இன்னேர் ஐயம் எழுகிற திப்போ...

முனி :

கேள் தயங்காதே...

## காட்சி — 2

இடம் : ஆச்சிரமம்

பாத்திரங்கள் : முனிவர்

காமமஞ்சரி

(பொழுது புலரும் நேரம். புள்ளினங்கள் சத்தமிடுகின்றன. காலை நேரத்திற்குரிய இசை ஒலிக்கின்றது.)

காம

கீர்த்தி மிக்கோய்
ஆன்றோர் ஒருமுறை ஆற்றிய அறம்பின்
மீண்டெக் காலமும் அழியா தென்றால்
அறவழி நின்ற அறிஞர்கள் பின்னால்
குறைசில புரிந்து நிறைதளர்ந் தாலும்
அறத்தினை யிழைப்பரோ? அறிய
விழைகிறேன்

முனி

அறம்செய் தோரும் அநீதிகள் புரிந்தால்
தண்டனை கிடைப்பது சகசம்தானே!

காம:

இல்லை சுவாமி, இது பெருந் தவறு

முனி:

பெண்ணே! என்ன பிதற்று கின்றாய்

காம :

பிதற்றல் அல்ல, பெரும் பே ருண்மை

முனி :

உண்மையா?

காம

ஆமாம் உரைக்கின்றேன் கேண்மின்
அகலிகை மீது ஆசைப்பட்ட
இந்திரன் அறத்தை இழந்தது முண்டோ?
திலோத்தமை மீது சிந்தை யிழந்த
பிரமாவின் பெருமை பிசகிய துண்டா
பெரியோர் செய்த பெரும்பிழை யெல்லாம்
அறத்தின் வலிமையால் அழிந்தே போயின

முனி :

(சிரிக்கிறார்)
தவறாய் இந்தச் சரித்திர மெல்லாம்
புரிந்து கொண்டாய் புத்தியே இல்லாய்
இந்திரன் முதலியோர் இதற்காக உற்ற
தண்டனை களைநீ மறந்தே விட்டாய்

காம :

மறந்திட வில்லை மாபெருந் தவத்தோய்!
தண்டனை பெற்றனர், ஆயினும் அவற்றை
கொண்ட தம் அறத்தால் வென்றிட
வில்லையா
இந்திரன் இன்றும் இந்திரனேதான்
பிரமா இன்றும் பிரமா வேதான்

முனி :

(சிரிக்கிறார்)

காம :

பெண்கள் மீது பிரியம் வைத்த
விண்ணோ ரெல்லாம் தாம் முன்பு செய்த
அறத்தின் வலிமையால் அசையவே யில்லை
இப்பொழு தாயினும் என்தன் கருத்தை
ஒப்புகின் றீர்களோ உயர்தவச் செல்வ

முனி :

உண்மைதான் மஞ்சரி உண்மைதான்
இந்த
உண்மையை இன்றுதான் உணர்கின்றேன்
யான்

காம :

இதுவரை காலமும் இயற்றிய உங்கள்
தவத்தின் வலிமையோ சாற்றுதற் கரிது

முனி :

எதற்காக இதனை இப்போ சொல்கிறாய்

காம :

இந்திரன் பிரமா இவர்களைப் போல
அறநெறி பூண்ட அருந்தவ ஞானி
நீங்கள் என்பதை நினைவு படுத்துறேன்

முனி :

அப்படியென்றால் ...

காம :

அவர்களைப் போல
தப்புகள் செய்யினும் தருமம் அழியாது

முனி :

மஞ்சரி ...

காம :

... ஆமாம் சுவாமி நீங்களோ
தேவரை யொத்த திண்மை பொருந்தப்
பெற்றவர் என்பதை யாவரும் அறிவர்

முனி :

மஞ்சரி ...

காம :

... சுவாமி ...

முனி :

... மயக்கமாய் இருக்குதே

காம :

என்தன் கருத்தா, அல்லது ..

முனி :

... இல்லை
உன்தன் வார்த்தையில் ஏதோ வசீகரம்
உள்ளதை யானும் உணர்கிறேன் மஞ்சரி
கல்லினை யொத்த கடிய நெஞ்சையும்
கனியச் செய்திடும் காந்த மிருக்குது
இனியவளே ...

காம :

சொல்லுங்கள் சுவாமி ...

முனி :

கண்ணே!
இத்தனை காலமும் பித்தனைப் போல
இத்தரை மீது இருந்தமை பேதமை
(பெருமூச்சு விடுகிறார்)
பத்தரை மாற்றுப் பசும் பொற் பாவாய்
சித்தம் கவர்ந்த தேவா மிர்தே

காம :

முனிபுங்கவ ... என்னை விடுங்கள் ... யாரும்
பார்த்திடப் போகிறார் ... பயமாய் இருக்குது

முனி :

அஞ்சுகமே நீ அஞ்சிட வேண்டாம்

காம :

சுவாமி ...

முனி :

... கண்ணே ...

காம :

ம்ம்ம் ...

முனி :

மஞ்சரி,
பிறந்த பயனைத் துறப்பவன் பேதை
பெண்கள் நலனைத் துய்ப்பவன் மேதை.

— திரை —

## காட்சி — 3

இடம்: சம்பாநாட்டு அரண்மனை
பாத்திரங்கள்: சம்பா நாட்டு மன்னன்,
அமைச்சன்

அமைச்சன்:

சம்பாநாட்டுத் தனிப்பெரும் தலைவ
அம்புவி போற்றும் அரசர்க் கரசே!
மாற்றார் மதிக்கும் மாபெரும் மன்னவ
போற்றி உங்கள் பொன்னடி வாழ்க

அரசன்:

மந்திரி யாரே வணக்கம். வருக
சுந்தரக் காமனுக் கிந்நகர் மக்கள்
வருடா வருடம் வழமையாய் எடுக்கும்
அரிய விழாநாள் இன்றே யாகும்

அமைச்சன்:

அறிவேன் மன்னவா, அதுமட்டு மன்றி
இன்று மாலை இடம்பெறும் விழாவில்
காமமஞ்சரியும் கலக்க விருப்பதாய்
மாநக ரெங்கும் மக்கள் பேசுறுர்.

அரசன்:

கானகம் சென்ற காம மஞ்சரி
கடிநகர் திரும்பி வந்துவிட் டனளோ?

அமைச்சன்:

ஆமாம் அரசே, அவளுடன் மருச்சி
முனிவரும் சேர்ந்து வந்ததாய்க் கேள்வி

அரசன்:
என்ன? அதிசயம் அமைச்சரே அதிசயம்
எண்டிசை புகழும் இணையிலா முனிவன்
பெண்டிர்பால் உள்ளம் பேதலித் தானென
நம்பிட என்னால் முடியவே யில்லை.

அமைச்சன்:
உண்மைதான் மன்னவா உறுதி குலைந்து
பெண்ணிவ ளோடு பெருந்தவ முனிவன்
இந்நகர் வந்துள்ளான்.

அரசன்:
... எல்லாம் விதியே

அமைச்சன்:
விதியல்ல அரசே விலை மாது செய்த
சதி, அதனாலே தவத்தை மறந்தான்

அரசன்:
[பெருமூச்சுடன்]
என் தன் தலைமையில் இந்நகர் மக்கள்

கடந்த வருடம் எடுத்த விழாவில்
நடந்த நிகழ்ச்சிதான் இதற்குக் காரணம்
[illegible]

அமைச்சன்:

ஆமாம்அரசே அன்றைய விழாவில்
ஆடற் கரசி யாகிய காம
மஞ்சரி வேறோர் மங்கை யுடனே
வெஞ்சினங் கொண்டு விடுத்த சபதம்
இன்றும் என் காதில் எதிரொலிக் கின்றது
கொஞ்சும் சதங்கை குலுங்கி யிசைத்திட
வஞ்சி யிவனுடன் வாகாய் நடனம்
செய்த செண்பக வல்லி சினந்து
காம மஞ்சரி யாளைப் பழித்து
வலிந்து சண்டைக்குச் சென்றதா லன்றோ
கலைந்தது மருச்சி கடுந்தவம்...

அரசன்:

உண்மை
செண்பக வல்லி சீற்றத் தோடு
காம மஞ்சரி யாளைக் கடிந்து
அடியே சிறுக்கி அதிகம் பேசிப்
படபடக் காதே பற்றேயில்லா
மருச்சி மாமுனிவரின் தவத்தையே குலைத்த
தாசியைப் போலச் சலசலக்காதே
என்றவ ளன்று இயம்பா திருந்தால்...
இன்றிந்த முனிவர் இந்நிலைக் காகார்

அரசன்:

முற்றிலும் சரியே, முனிவரை வென்ற
பொற்கொடி காம மஞ்சரி யாளின்
சொற்படி கேட்கும் தொட்டாட்டு வேலைச்
சேவகி யாகச் செண்பக வல்லி
ஆகப் போகிறாள். அந்தோ பாவம்.

அமைச்சன்:

சபதத்தில் தோற்றவர் வெல்பவ ருக்கு
அடிமை யாவதா யன்றோ அன்று
இருசா ராரும் ஏற்றுக் கொண்டனர்.

அரசன்:

என்றாலும் பெண்கள் இப்படி நடப்பது
நன்றல்ல எமது நாட்டுக்கே யீனம்
தவத்தைக் குலைக்கும் சண்டாளத்
தனத்தை
நடக்க விட்டது நமது பிழையே

அமைச்சன்:

நடந்ததை எண்ணி நலிவதனாலே
முடிந்தவை திரும்ப ஆவதே யில்லை
நேற்று நிகழ்ந்ததை நினைத்து வருந்தி
சற்றில் கிடைப்பது இதயச் சுமையே
நாளை நடப்பதை நன்கு யோசித்து
வாழும் வழியை வகுப்பதே மேலாம்.

— திரை —

## காட்சி — 4

இடம்: விழா அரங்கின் ஒருபுறம்
பாத்திரங்கள்: முனிவர்
காமமஞ்சரி

வசந்தவிழா நிறைவேறிவிட்டது. விழா முடிவில் காமமஞ்சரியும் முனிவரும் வீட்டுக்குப் புறப்படுமுன் நிகழ்ந்த உரையாடல்.

[உரையாடல் தொடங்குமுன்னர் ஒரு விழா நடைபெறுகிறதென்பதை ஒலிமூலம் காட்டுதல் நன்று.]

முனிவர்:
கண்ணே காம மஞ்சரி, இந்த
மண்ணே புகழும் வசந்த விழாவில்
அரியவுன் ஆடல் அழகினைக் கண்டு
பெரிதும் மகிழ்ந்தேன்.

காம:
... நன்றி சுவாமி.

முனி:
ஆடற் கலைக்கே அணிகலம் நீயே
தேடற்கரிய தித்திக்கும் தேனே
ஆடகப் பொன்னே அமுதே உன்னை
அடைந்த நானோர் அதிஷ்ட சாலி

காம:
போதும் புகழ்ச்சி...

முனி:

புகழ்ச்சியல்ல
உள்ளதைத் தானே உனக்குச் சொல்கிறேன்
தெள்ளமுதே இந்தச் சிறியேன் உனக்கு
என்ன கைமாறு இயற்றப் போகிறேன்
தன்னந் தனியனாய்த் தவம் செய்த எனக்கு.
இன்ப மென்றால் எதுவெனக் காட்டிய
அன்பே, என்தன் ஆருயிர்தனையும்
உனக்காக ஈய ஒரு போதும் தயங்கேன்!

காம:

சுவாமி! நானோர் பாக்கிய சாலி
உங்கள் உதவி இல்லை யென்றிட்டால்
இன்றைக் கென்னிடம் தோற்ற சண்பக
வல்லியாள் வீட்டு வாயிற் படியில்
அடிமை புரியும் தாசியா யிருப்பேன்
[பெருமூச்சு விடுகிறாள்]

முனி:

என்னையும் வென்று, அந்த ஏந்திழை
தன்னையும் வென்ற சமர்த்துக் காரி
சகல கலாவல்லி

காம:

[சிரிக்கிறாள்]
நன்றி தேவரீர் நன்றி.

முனி:

கண்ணே
நேர மாகுது நீயும் களைத்து
விட்டாய் ... வீடு நோக்கிச் செல்வோம்

காம:
ஆமாம் ஐயா!
நேரம் நெருங்கி விட்டது. நாங்கள்
பிரிய வேண்டிய உரிய நேரம்
பெரிய முனிவ! பேதை யெனக்கு
சிறியதோர் உதவி செய்திட வேண்டும்

முனி:
[மகிழ்ச்சிச் சிரிப்புடன்]
உள்ளம் கவர்ந்த உயிரோ வியமே
உனக்கென் உயிரையும் உதவுவேன், என்ன
உதவி வேண்டும்
உரைத்திடு செய்கிறேன்.

காம:
சண்பக வல்லியைச் சமரித்தாய் வெல்ல
உங்களை யடைந்தேன் உதவிசெய்தீர்கள்
அந்த உதவியைஇந்தப் பேதை
எந்த நாளும் மறந்திட மாட்டாள்

முனி:
பழைய கதையிது
[illegible]

காம:
படித்த பெரியோய்!
காரணத்தோடுதான் இதனைச் சொல்கிறேன்
பூரண வெற்றி பூண்டு அவளை
அடிமைப் படுத்திய பின்னர், நானே
வீணாய் உங்களை வீட்டில் வைத்து
வருத்துவ தென்பது பெருத்த பாவம்

முனி:
பாவமா? அதுவென் பாக்கிய மன்றோ

காம:
இல்லை முனிவரே, இனிமேல் உங்கள்
உதவி எனக்குத் தேவையே யில்லை
ஆதலால் சுவாமி அடியேனை மன்னித்துக்
காதலால் விட்ட சுடுந்தவம் செய்யக்
கானகம் செல்க. நான்மனை செல்கிறேன்

முனி:
மஞ்சரி! என்ன வார்த்தை செப்பினாய்
இதற்குத் தானா எனது தவத்தையே
உதறி விட்டு உன்னோடு வந்தேன்
மனதால் கூட உனக்கோர் ஊறு
நினைக் காத என்னை நீபிரி யாதே

காம:
முனிவரே நானோர் கணிகை எனது
பணியைப் பற்றி படித்தநீர் அறிவீர்
எனது லட்சியம் நிறைவேறி விட்டது
இனி உமைப் பற்றி எனக்கேன் கவலை?

முனி:
அப்படிச் செப்பாதே காம மஞ்சரி
காதலின் புனிதத் தன்மையை மறந்து
பேசுதல் தவறு பெண்ணே—

காம:
... முனிவரே,
காதலைப் பற்றிக் கணிகை யெனக்கேன்
ஓதுநீர்...

காம:

... முனிவரே,
காதலைப் பற்றிக் கணிகை யெனக்கேன்
ஓதுநீர்...

முனி;
... மஞ்சரி உதுபெருந் தவறு

காம:
தவறோ சரியோ அதைப்பற்றி எனக்கேன்
கவலை
என்தன் நோக்கம் இன்றுடன்
நிறைவேறி விட்டது. பிறகென்ன பேச்சு

முனி:
வஞ்சகி நீயோ நஞ்சினுங் கொடியள்
பஞ்சமா பாதகி வஞ்சித்தே விட்டாய்

காம:
முனிவரே! என்னை முனிந்தென்ன லாபம்
திட்டுங்கள் நானே சிரித்துக் கொண்
டேற்பேன்
ஏனென்றால் நீங்கள் எனக்கு ஒருமுறை
உதவி யிருக்கிறீர் நன்றி மறப்பனே?

முனி:
சாகசக் காரி தவத்தையே அழித்த
யோகப் பிசாசே முன்னால் நிற்காதே
போய்விடு பிசாசே போய்விடு (அழுகிறார்)

காம:
[சிரிக்கிருள்]

முனி:
நன்றி கெட்டவளே நாணமற்றவளே
இன்னுமா நிற்கிருய்?...

காம:
[ஏளனச் சிரிப்புடன்]
செல்கிறேன முனிவரே ... மீண்டுமென்
நன்றி

முனி:
[அழுதபடி]
இறைவா! இதுவா உன் சோதனை.
இதுவா தீர்ப்பு
முறையோ தெய்வமே இந்த மூடனை
மன்னிப் பாயா? மன்னிப் பாயா?
[விம்மி விம்மி அழுகிருர்]
பெண்ணெனும் மாயப் பிசாசிடம் சிக்கி
கண்ணியம் இழந்த கயவனும் என்னைக்
கண்ணுத லானே! காத்தருள் புரிக.
பாரோர் பழிக்கும் பரத்தை யிடம்போய்
ஊரார் தூற்ற ஒருகதி யின்றி
நிற்கும் இந்த நீசனை, ஏற்றுக்
கற்றைச் சடையாய்! காத்தருள் புரிக.
புண்ணிய மழித்த புலையனைப், பாவப்
பொதியினைச் சுமக்கும் புல்லனை, ஈசா
காத்தருள் புரிக காத்தருள் புரிக.
[விம்முதல்]
ஓம் நமச்சி வாய. ஓம் நமச்சி வாய.
ஓம் நமச்சி வாய.

— திரை —

(முற்றும்)